கத்தோலிக்க வாரவெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

மலர்: 97 இதழ்: 8
மாசி 26 — 1972
பிரதி சதம் 15

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண விழிப்பது வீண்"

# வட அயர்லாந்தில் இராணுவத்தின் பரிதாபநிலை

தொட்டாலும் கேடு, விட்டாலும் கேடு என்ற பரிதாப நிலைமையில் பிரிட்டிஷ் இராணுவத்தினர் இன்று வட அயர்லாந்தில் இருக்கின்றார்கள். வட அயர்லாந்தில் பாரம்பரியமாக செல்வாக்குள்ளவர்களாக விளங்கிவரும் சுமார் 1000,000 புரொட்டெஸ்தாந்தருக்கும் செல்வாக்கில்லாத வறியவர்களாக அங்கு வசிக்கும் சுமார் 500,000 கத்தோலிக்கருக்குமிடையில் பல நூற்றாண்டுகளாக இருந்துவரும் பகை காலத்துக்குக் காலம் வெளிக்கிளம்பி யுத்தங்களுக்கும் கலகங்களுக்கும் இடமளித்ததைச் சரித்திரம் கூறுகின்றது. ஜனநாயக உரிமைகளைக் கத்தோலிக்கர்கள் கோர அங்கு ஆளும் வகுப்பினராகிய புரொட்டஸ்தாந்தர்கள் அதை மறுப்பதே இக்கோளாறுகளுக்கு மூலகாரணமாகும். சென்ற மூன்றுவருட காலமாக அங்கு உள்ள நிலைமையைச் சரித்திரம் மீளவும் முன்போல நடைபெறுகின்றது எனக்கூறிவிடலாம். இக்கலகங்களை ஓரளவுக்கு மட்டுப்படுத்த அண்மையில் அங்கு கொண்டுவரப்பட்ட ஆங்கில இராணுவத்தாரின் தொகை 5000 இலிருந்து 50,000 ஆகிவிட்டது. இரு பகுதியினரிலும் தீவிரவாதிகள் இருக்கின்றனர். அயர்லாந்து கத்தோலிக்கருக்கிடையில் அதிகம் செல்வாக்கில்லாத (I.R.A.) அயர்லாந்து குடியரசுப் புரட்சி இராணுவத்தினரை கத்தோலிக்கரின்சார்பில் பலத்துவருகின்றது. மேற்றிராணிமாரோ சமாதான முறையில் முடிவைக்காண முயற்சித்து வருகின்றார்கள். ஆனால், ஐ. ஆர். ஏ காரர்கள் அவர்கள் சொற்படி நடக்க மறுத்துவிடுகின்றார்கள். கலகக்காரரை அடக்க அல்ஸ்டர்பிரிவு அரசாங்கம் கொடிய முறைகளைக் கையாளுகின்றது. ஆனால், ஐ. ஆர். ஏயின் எதிர்ப்பை அவர்கள் முறியடிக்க முடியாதிருக்கின்றனர். ஆங்கில இராணுவத்தினரைக் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ளக் கட்டளையிருந்த பொழுதிலும், தற்காப்புக் காரணமாகவும், நிலைமையை சமாளிக்க முடியாமையினாலும் பல தடவைகளிலும் கொடிய வன்செயல்களைச் செய்துவிடுகின்றனர். இரு பகுதியிலும் பரிதாபமரணங்களும் கொலைகளும் நடைபெறுகின்றன. உலகின் பல பகுதிகளிலுமிருந்து கவலை தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் பல தடவைகளிலும் நீதியான முறையில் முடிவுகாணவும் வன்செயல்களை இருசாராரும் தவிர்த்துக்கொள்ளவும் விண்ணப்பித்திருக்கிறார்.

# ருஷிய 'ஒதொடக்ஸ்' ஆயர்களின் வத்திக்கான் விஜயம்

ருஷியதேச 'ஒதொடக்ஸ்' ஆயர்களில் நால்வர் இருவாரங்களின்முன் வத்திக்கானுக்கு விஜயம்செய்து பரிசுத்ததந்தை 6-வது சின்னப்பருடன் சம்பாஷித்துக் கொண்டனர். கிறீஸ்தவ சமயகல்வி கருமமாகவே அவர்கள் ரோமாபுரிக்கு வந்துள்ளனர். சில மாதங்களின் முன் யேசுசபைத் தலைவர் அதிவண. பேதுரு அருப்பெ சுவாமியார் ருஷியா தேசம் சென்றிருந்தபோது இப்பிரிவு மேற்றிராணிமாருடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர்பே இவர்களது ரோமாபுரி விஜயத்துக்குக் காரணமாகும். ஒற்றுமைக்காரியாலய அதிபர் கருதினல் வில்லெபிரான்ட் ரோமாபுரியில் அவர்களைப்பலதடவைகளில் சந்தித்து சமயசம்பந்தமான பேச்சுக்களை நடத்தியிருக்கின்றார். பரிதந்தை இவர்களை அன்புடன்வரவேற்று அவர்களது பதவிக்குரிய தக்க உபசாரம் அளித்துக் கிறீஸ்துநாதரின் போதனைகளைப் பாதுகாத்துவர கிறீஸ்தவர்களாகிய சகலருக்கும் உள்ள கடமையை வற்புறுத்தியருளினர்.

## பாத்திரமறிந்து பிச்சையிடு

வங்காள தேசமக்களுக்கு அவர்கள் தேவையை நன்கு அறிந்து அதற்குத் தக்க வகையில் உதவிபுரிய வேண்டுமென உலக கிறீஸ்தவசபைகளின் சங்கம் அங்கு அனுப்பிய அவதானி அறிவித்திருக்கிறார். கொடுக்கும் உதவி முடிந்ததன்பின் அவர்கள் நடுத்தெருவில் நிற்கும் நிலைமையைத் தவிர்த்து, அவ்வுதவியைக் கொண்டு அவர்களின் பழைய நிலைமையை அடைய உதவுவதாக இருக்க வேண்டுமென்பதே அவரது எண்ணம். அவர்களது பழம் முறையான வீடுகளை அவர்கள் அமைத்துக்கொள்ள உதவுவது தகாது எனவும் அவர் கூறியிருக்கிறார். வீடு, மருந்து வகைகள், உணவு ஆகியனவே அவர்களது அத்தியாவசிய தேவைகள்.

## ஒற்றுமை இயக்கம் வாட்டம் கொள்ளவில்லை

வத்திக்கானில் ஒற்றுமைத் தினக் கொண்டாட்டத்தில் நடைபெற்ற திருச்சடங்கில் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பரும் கொன்ஸ்தாந்திநோப்பிள் ஒதொடக்ஸ் பிதாப்பிதா அத்தனகோரஸ் அடிகளாரின் பிரதிநிதியாகிய மெலிற்றன் அடிகளாரும் கூட்டாகப் பங்குபெற்றுக் கொண்டனர். அவ்வைபவத்தில் ஒற்றுமை இயக்கம் வாட்டங்கொண்டு விடவில்லையெனக் கூறினர். வரப்போகும் ஒற்றுமையில் தமக்கு உறுதியான நம்பிக்கை உண்டு என்றும், உண்மையான ஒற்றுமைக்கு வேண்டிய ஆராய்வுகளும் செபங்களும் நடைபெற்றுவரும் தன்மை தமக்கு ஆறுதல் அளிப்பதாகும் எடுத்துரைத்தார் பரிசுத் ததந்தை.

# வத்திக்கானும் போலாந்தும்

கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சம்பந்தப்பட்ட கருமங்களில் வத்திக்கானின் விசேட நிபுணரான அகஸ்ரீன் கசாரொலி அதிமேற்றிராணியார் சமீபத்திலே போலாந்தில் பத்துத் தினங்கள் தங்கியிருந்து வத்திக்கானுக்கும், போலாந்த கம்யூனிஸ்த அரசாங்கத்துக்குமிடையில் நல்லுறவுகளைச் சமரசப்படுத்தும் விஷயமாய்ச் சம்பாஷணைகள் நிகழ்த்திவிட்டு ரோமைநகர் திரும்பியபின் "பல்வேறு நன்மை விளைக்கும் பிரச்சினைகள்" பற்றிய சம்பாஷணைகளைத் தொடர்ந்து நடத்துவதால் நன்மையுண்டாகும் என்பதைத் தானும், போலிஷ் அரசாங்கமும் ஒப்புக்கொண்டிருப்பதாக வத்திக்கான் தெரிவித்திருக்கின்றது. இது அவர் போலாந்துக்கு நடத்தியுள்ள மூன்றாவது பிரயாணமாகும்.

சமயவிவகார போலிஷ் கருமசாலையின் தலைவரான அலெக்சாண்டர் ஸ்காரினெஸ்கி சென்ற ஆண்டில் இருமுறை ரோமைநகர் சென்றிருக்கிறார். அவர் முதன்முறையாக அங்குபோய் கசாரொலி அதிமேற்றிராணியாருடன் கலந்து பேசிச்சென்றார். இரண்டாம் முறையாக சென்ற ஐப்பசிமாதம் அங்கு திரும்பவும் சென்று ஒரு போலிஷ் பிரான்சிஸ்கன் சபையினரான மக்ஸிமிலியன் கொல்பே சுவாமியாருக்கு அருளப்பட்ட முத்திப்பேறு பெற்றபட்ட திருவைபவத் திருச்சடங்கில் கலந்து பாப்பரசரின் பேட்டியும் பெற்றுத் திரும்பினர்.

இம்முறை அவர் ரோமை நகரில் தங்கியிருந்தபோது போலாந்திலே திருச்சபையினதும், அரசாங்கத்தினதும் உறவுகள் இரு அத்திவாரங்களில் ஏற்படுத்தப்படுமிடத்தே ஈருந்த சமரசம் ஏற்படுமெனப் பகிரங்கமாகத் தெரிவித்தார். அவற்றில் ஒன்று, போலிஷ் அரசாங்கத்தின் பொதுவுடைமைப் போக்கைத் திருச்சபையும் போலிஷ் மேற்றிராணிமாரும் சகித்துக்கொள்ள வேண்டுமென்பதையே அங்கீகரிக்க வேண்டும்.

பற்றது, திருச்சபையின் சமய நடவடிக்கைகளை அரசாங்கம் அங்கீகரிப்பது மட்டுமல்ல, ஆனால், "பிள்ளைகளுக்கும், இளைஞர்களுக்கும் சமய கல்வி பயிற்றுவது" உட்பட ... புக்கொள்ள வேண்டும்.

## அணு நிபுணர் குருவாகினர்

8 வருட காலமாக உயர் பௌதீகக்கலை மாணவராகவும் 3வருடங்கள் அவுஸ்திரிய தேச அரசாங்க அணுச்சக்தி நிலைய பொறுப்பாளராகவும் சேவை செய்தபின் தமது 35-ம் பராயத்தில் விஞ்ஞானத்துறையை நெகிழ்ந்து குருமாணவராகி அண்மையில் அபிஷேகம் பெற்றுக் கொண்டார் லியொனட் அடிகளார். தமது மனமாற்றத்தைப்பற்றி குறிப்பிடுகையில் பெயர்பெற்ற விஞ்ஞானியாய் இருப்பதிலும்பார்க்க ஒரு குருவானவராயிருந்தால் உலகுக்கு கூடியசேவை செய்யலாம் என்பதை உணர்ந்தே தான் குருவாகினர் எனக் கூறினர்.

## 124 படிகளுடைய கோவில்

ரோமை நகரிலே அருக்கோயெலி எனுமிடத்திலுள்ள, புனித மரியநாயகியின் கோவில் போய்ச்சேர 124 படிகள் ஏறிச்செல்ல வேண்டும். அந்நகரில் தலைகாட்டிய பிளேக்நோய் அற்புதமாக நின்று போனதற்கு நன்றி செலுத்துமுகமாக 1348ஆம் ஆண்டு ரோமர்களால் இந்தப்படிகள் அமைக்கப்பட்டன. இந்தக்கோவிலிலே 13ஆண்டு பிரான்சிஸ்குவின்சபைச் சந்நியாசர் ஒருவரால் பலஸ்தீனாவிலுள்ள ஒலிவமரத் தோட்டத்திலிருந்து கொண்டு போகப்பட்ட மரக்கொண்டு கொத்தப்பட்ட "சான்ரோ பாம்பினோ" அதாவது திருக்குழந்தை யேசுவின் போனசுரூபம் இருந்துவருகிறது. கிறிஸ்மஸ்விழா வரும்போதெல்லாம் இந்தச் சுரூபங்கொண்டு நித்தியநகர் ஆசீர்வதிக்கப்படுகிறது அன்று தினம் ரோமர்களின் பிள்ளைகள் அதற்கு விசேஷ வணக்கஞ் செய்து திருவிழா கொண்டாடுகிறார்கள்.

# குடும்ப செபமாலைச் சினிமாவின் ஆரம்ப வரலாறு

குடும்பசெபமாலைக் குரவரெனக் குவலயமுழுவதும் புகழ்பெற்றவரான வண. பற்றிக் பெய்ற்றன் சுவாமியார் லண்டன் நகரிலுள்ள வெம்பிளி அரங்கிலே இற்றைக்குப் 19 வருடங்களின் முன் தமது சுற்றுப்பிரயாணத்தின் ஈற்றந்த படையணியை வகுத்து நடத்தியபோது, அங்கே இளவயதுடைய ஒரு மேற்றிராணியாரும் சமுகமாயிருந்தார். இவர்தான் செபமாலைப் படையணியின் எதிர்காலம் பெரும் செல்வாக்குப் பெறக் காரணமாயினர்.

இவர்தான் முன்னர் ஓர் ஸ்பானிய நியாயவாதியாயும், பத்திரிகை ஆசிரியராயும், அத்தேசத்தில் கத்தோலிக்க சேவைக்குத் தலைமைதாங்கிய சாதாரண கத்தோலிக்கராயும் விளங்கியிருந்த மலாக்காவின் ஹெரருற மேற்றிராணியாரென்று சுவாமியாரே கூறுகின்றார், பின்பு இவர் ஒரு கருதினலுமாயினர். பெய்ற்றன் சுவாமியாரின் செபமாலைப்படையணியின் மட்டிலே இவர் பெரிதும் அருட்சி கொண்டவராய், ஸ்பானிய தேசத்திலும் அதனை ஒருதரம நடத்துமாறு அவரைக் கேட்டுக் கொண்டார்.

இதைக் கேட்டதும் சுவாமியார் "ஆனால், ஸ்பானிய பாஷை எனக்குத் தெரியாதே" என்றார். "அப்படியானால் வாரும், நமது இல்லத்தில் தங்கியிருந்து அதைப் படித்துக் கொள்ளும்" என்றார் மேற்றிராணியார், அதைப் படிக்கச் சுவாமியாருக்கு ஆறுபாதகாலம் பிடித்தது. அதனைத் தொடர்ந்து ஸ்பானிய தேசத்திலே பெரிதும் வெற்றிகரமாகச் செபமாலைப் படையணி ஒன்று நடைபெறலாயிற்று. இதிலிருந்தே ஹெரருற மேற்றிராணியாரின் ஆதரவோடு 15 செபமாலைச் சினிமாப்படங்கள் தயாரிக்கப்பட்டன. இந்தப்படங்களைக் குறைந்த பட்சம் 3கோடியே 50லட்சம் மக்கள் சுமார் 200 ரெலிவிஷன் நிலையங்கள் மூலம் பார்த்திருக்கிறார்கள்.

இவைகளைத் தொடர்ந்து "இது உன் தாய்" என்ற நாமத்துடன் மாதாவின் மற்றோர் சினிமாப்படம் ஐக்கிய அமெரிக்க தேசத்தில இப்போது தயாரிக்கப்படுகிறது. இதற்குப் பின்னணியாக ரோமாபுரி சம்பேதுருவானவர் மகாலயத்தில் இருந்து வருவதும், மைக்கேல் ஆஞ்செலோ எனும் பிரபல சிற்பியின் கைவேலைப்பாடுமான வியாகுல மாதா சுரூபத்துடன் கூடிய ஓர் அறிமுக ஆரம்பவுரையை வண. பெய்ற்றன் சுவாமியார் அருளியிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலையங்கம்

தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதிபெற்றபின்பே ஆசிரிய தலையங்கங்கள் பிரசுரஞ் செய்யவேண்டியிருப்பதாலும், அவ்வதிகாரியின் அங்கீகாரத்தை உரியநேரத்தில் பெறுவது கஷ்டமாயிருப்பதாலும் சிலவாரங்களுக்கு ஆசிரிய தலையங்கங்கள் வெளிவரமாட்டாது என்பதை வாசகநேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சத்தியவேத பாதுகாவலன்

# திருப்பாலத்துவ சபை

'சிறுவரை என்னிடம் வரவிடுங்கள்'' என்று கிறிஸ்துநாதர் கூறிய வார்த்தைகள் சிறுவர் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதைக் காட்டுகிறது. அவர்கள் அலங்காரப் பொருள்களோ, செல்லப்பிராணிகளோ அல்ல, பூரணமான மனிதர்கள். பிறந்த கணமுதற்கொண்டே இறைவனின் அற்புத திட்டத்தில் அவர்களுக்குப் பங்குண்டு. ஒரு மொட்டினுள் மலரின் சகல உறுப்புக்களும் அடங்கியுள்ளதுபோல ஒரு குழந்தையிடம் மனிதப் பண்புகளும் திறன்களும் அடங்கியுள்ளன. இன்றைய சிறுவர்தான் நாளைய பிரஜைகள் என்றும் இன்றைய சிறுவர்தான் எதிர்கால உலகம் என்றும் கூறப்படுகிறது. அதேபோல் இன்றைய சிறுவர்தான் நாளைய திருச்சபை. ஆனால், அவர்கள் இன்றைய திருச்சபையுங்கூட. திருச்சபையின் சகல செல்வங்களையும் அனுபவிக்கும் உரிமை அவர்களுக்குண்டு. அதேபோல் திருச்சபையின் பணிகளிலும் தம் சக்திக்கேற்றவாறு பங்குபற்றும் கடமையும் உண்டு. ஆம், வேதபோதகப்பணி அவர்களுக்கும் உரியது. சிறுவர் அற்பமானவர் அல்ல, திருச்சபையின் சிறப்பான அங்கத்தினர். பாப்பரசரின் சொந்தச்சபையாகிய திருப்பாலத்துவசபை சிறுவரின் அப்போஸ்தல பணிக்கென்றே நிறுவப்பட்டது. சிறுவர் தமது இந்த அழைப்பை உணரச் செய்வது பெரியவர்களின் கடமை. மலர் இயற்கையாக மலர்ந்து மணம் வீசுவதுபோல தம்மிடம் இயல்பாக அமைந்துள்ள பண்புகளைச் சுடர்விட்டுப் பிரகாசிக்கச் செய்யவும், புதுப்புதுக் காரியங்களைக் கண்டுபிடிக்கவும் பெற்றோர், ஆசிரியர் முதலியோரின் உதவி தேவைப்படுகிறது. திருச்சபையின் போதகப் பணியில் பங்குபெறுவதற்கு சிறுவரின் தூயஉள்ளங்கள் ஆர்வம் நிறைந்து விளங்குகின்றன. செபத்தின் மூலமும் தவத்தின் மூலமும் அவர்கள் பாப்பரசரின் சிறிய தூதுவராக விளங்கக்கூடும். இப்பண்புகளை அவர்களிடம் வளர்க்க நாம் யாது செய்கிறோம்? பெரியவரின் மதிப்பீடுகளை சிறுவர் எளிதில் கிரகித்துக் கொண்டு விடுவார்கள். எனவே பெரியோரின் முன்மாதிரிகை முக்கியமானது. ஆகவே, நாம் அறியாமையால் அல்லது அசட்டையால் எமது கடமையில் தவறிவிட்டால் எமது பொறுப்பு மிகப் பாரதூரமானது.

வேதபோதக அலுவலில் சிறுவர் தமது பணியின் முக்கியத்துவத்தை உணரும் நாள்தான் திருப்பாலத்துவ தினம். தமது சிறிய செயல்களின்மூலம் பெரிய காரியங்களை நிறைவேற்ற முடியும் என்பதை அவர்களுக்கு உணர்த்தும் நாளிது. திருப்பாலத்துவ சபைமூலம் அனைத்துலக வேதபோதகப் பணியில் பங்குகொள்ளும் வழியை சிறுவருக்கு உணர்த்துவோமானால் அவர்கள் அதிற்சேர முன்வருவார்கள் என்பது நிச்சயம். இதன் பயனாக அவர்களிடத்தில் ஏற்படும் பரந்துபட்ட அன்பும், சுயநலமற்ற தியாகமும் அவர்களை கிறிஸ்துமயமாக ஆக்குகின்றன. இதனால் அவர்கள் முன்னைவிட சிறந்தவர்கள் ஆகிறார்கள். இவையெல்லாம் தாமே உணர்ந்து செய்யும் செபதபங்களின் காரணமாக விளையுமேயன்றி கட்டாயத்தின் பேரிலோ, வாடிக்கையினிமித்தமோ செய்யும் காரியங்களால் விளையாது என்பது தெளிவு. ஆகவே, சிறுவரைத் திருப்பாலத்துவ சபையின் அங்கத்தவராக்குவது மட்டுமல்ல அவர்கள் அதன் கருத்தை நன்கு உணரச் செய்வது முக்கியமாகும்.

## பள்ளியில் படிக்கச்சென்றுர் வயோதிப மேற்றிராணியார்

ரஸ்மேனியா தேசத்தில 36ஆண்டுகள் தேவதொண்டு செய்து ஓய்வுபெற்ற ஆயர் ஜெயஸ்சீடின் அடிகளார், பொறுப்புகளிலிருந்து நீங்கியதும், ரோமாபுரி சென்று திருந்திய உலகு அமைப்பாளர் நடத்தும் கல்விச்சாலையில் உபதேசம் பெற்று, சில வாரங்கள் தமது பிறந்த இடமாகிய இங்கிலாந்தில் செலவு செய்ததன்பின் மீளவும் ரஸ்மேனியா சென்று சாதாரண குருவாகத் தேவதொண்டு புரிந்து வருகின்றுர். ரோமாபுரியில் அவர் வயோதிப வயதில் விசேஷ பயிற்சி பெற்ற தொண்டு பொதுநிலையாளர் சேவையாம். ரஸ்மேனியாபிரிவில தொண்டுசெய்த 36வருடங்களில் 26 வருடங்கள் அவர்மேற்றிராணியாராக இருந்தார். அவர் ஆயர்பதவியிலிருந்த இரு பிரிவுகளிலும் சுதேச குருமாரின் முன்னேற்றத்தில் ஆர்வமுடையவராகி இரு பிரிவுகளிலும் சுதேச மேற்றிராணிமாரை ஆசனத்திலிருத்தி அவர் அப்பொறுப்பிலிருந்து நீங்கிக்கொண்டார்.

# யேசு தவம் செய்தார்

அந்த நாட்களில ஸ்நாபக அருளப்பர், யூதேயா தேசத்தின வனாந்தரத்தில் பிரசங்கம் செய்யவந்து "தவம்செய்யுங்கள் ஏனெனில், மோட்ச இராச்சியம் சமீபித்திருக்கிற''தென்றார். அப்போது யெருசலேம் பட்டினத்தாரும் யூதேயா தேசத்தார் எல்லாரும், யோர்தான் நதியின் சுற்றுப் புறத்தார் அனைவரும், அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போய்த் தங்கள் பாவங்களை வெளிப்படுத்தி யோர்தான் நதியில் அவரால் ஞானஸ்நானம் பெறுவார்கள்.

தவம் என்பது மனஸ்தாபத்தைக் குறிக்கிறது. ஸ்நாபக அருளப்பர் கொடுத்த ஞானஸ்நானம் பாவப் பொறுத்தலுக்கு ஆயத்தப்படுத்துகிற ஒரு சடங்காகும். யோர்தான் நதிக்கரையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் தங்கள் பாவங்களை வெளிப்படுத்தினார்கள் என்று கூறுவதால், பாவப் பொறுத்தலுக்கு ஆயத்தமாகப் பாவங்களை அறிவித்தல் வேண்டுமென்று அறிதல் வேண்டும்.

ஸ்நாபக அருளப்பர் பரிசேயரிலும, சதுசேயரிலும் அநேகர் தம்முடைய ஞானஸ்நானம் பெறவருகிறதைக் கண்டு, அவர்களை நோக்கி "விரியன் பாம்புக்குட்டிகளே வரப்போகிற கோபாக்கினைக்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு வழிகாட்டினவன் யார்?''என்று சொல்லுவார்.

பரிசேயர், சதுசேயரிற் பெரும்பாலோர் புண்ணிய வேஷம் தரித்த மேட்டிமைக்காரராய், மெய்யான தேவபக்தியற்றவர்களாய் இருந்தார்கள் ஆதலாற் "தகுதியான தவப்பலனைச் செய்யுங்கள்'' "இப்பொழுதே மரங்களின் வேருக்குக் கோடரி போட்டிருக்கிறது. ஆகையால நற்கனி கொடாத மரங்கள் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்''என்று ஸ்நாபக அருளப்பர் அவர்களை நோக்கிக் கூறினார்.

தவக்காலம் ஆரம்பமாயிற்று. விபூதித்திருநாளன்று நெற்றியிற் தவத்தின் அடையாளமாக "ஆசீர்'' தரித்துக்கொண்டோம். உலக முடிவு காலத்தில் உலகமெல்லாம் சாம்பராகும் என்னும் உண்மை வாக்கினை நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

புனித சின்னப்பர் "சர்வேசுரனோடு திரும்பவும் உறவாகுங்கள்''என்று கூறும் அருளுரையை நினைத்து நமது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டுப் பாவங்களை இறைவனிடம் அறிக்கை செய்ய, நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து முழுமனதுடனே மனம்திரும்பி 'இறைவனின் முன்பாக உறுதியான பிரதிக்கினை செய்துகொண்டு இவ்வரிய தவக்காலத்தில் செப, தவ, ஒறுத்தல் உபவாசங்களைப் புரிந்து சத்தியப் பாதையில் வழிநடத்தல் வேண்டும். அடிக்கடி திவ்விய பலிப்பூசையிற பங்குபற்றித் திவ்விய நன்மை பெற்றுப் பரலோக வழியிற் பயணம் செய்வதற்குப் பலம்பெற்று வாழ்தல் வேண்டும். இருள் நீங்க ஒளிவேண்டும். பாவ இருள் சூழ்ந்த பூவுலகில் ஒளியின் பாதையில வழிநடக்க, என்றும் அணையாத தீபமாகிய யேசுவை தேவநற்கருணை மூலம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

நமது சரீர ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தி, சீர்கெட்ட சினிமாப் படக்காட்சிகள், மற்றும் ஆபாசப்படங்கள் இவைகளைப் பாராது, சன்மார்க்கத்துக்கு விரோதமான பத்திரிகை புத்தகங்களை வாசியாது, கத்தோலிக்க வேத சன்மார்க்க வழிகளின் பாதுகாவலனை விளங்கும், பத்திரிகை புத்தகங்களை வாசித்து, புண்ணிய சாங்கோபாங்கத்தில் வளருதல் வேண்டும். மதுவருந்தல, உணவு உண்டிகளை ஆவலோடு புசித்தல் இவைகளில் மிகவும் கட்டுப்பாடுகளுடன் ஒறுத்தல்

(தொடர்ச்சி 4-ம்பக்கம்)

## நீங்கள் அறிவீர்களா?

# வயதோ 129 ஆண்டுகள்

### என்ன? ஏன்? எப்படி?

* பரிசுத்த பாலத்துவசபை அனைத்துலக கத்தோலிக்க சிறுவர்களுக் குரியது
* இது பாப்பரசரின் அதிகார பூர்வமான சிறுவர் மறைபரப்புச் சபை.
* பன்னிரண்டு வயதுக்குட்பட்டவர்கள் மறைபரப்புப் பணியில ஆர்வம்கொள்ள ஊக்குவிப்பதே இச்சபையின் நோக்கம்.
* தம் செபத்தாலும், தியாகத்தாலும், தாமே சேர்த்த தம் பணத்தாலும் அனைத்துலக சிறுவர்களுக்குக் கிறிஸ்தவ கல்வியை ஊட்ட உதவுகின்றனர்.
* இச்சபையின் உறுப்பினராய்உள்ள பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர்களின் தியாக செயல்கள் — அதாவது அவர்களது ஒருசத, ஐந்துசத, பத்துச்சத நாணயங்கள் பல ஆண்டுகளாக வறிய, கைவிடப்பட்ட குழந்தைகளுக்கெனப் பாடசாலைகளும், அனாதை மடங்களும், மருத்துவ மனைகளும கட்டவும், நடாத்தவும் பயன்பட்டு வந்திருக்கின்றன.
* பரிசுத்த பாலத்துவ சபைக்குத் தலைவராகவுள்ள பரிசுத்த தந்தை தாமே விளக்குவதுபோல, பணம் சேர்க்கும இன்னும் ஒரு சபையல்ல இது சிறுவர்களுக்குச் சிறுவர்களால் ஆற்றப்படும் ஓர் அப்போஸ்தலிக்க பணி. மறைபரப்பு நாடுகளில் உள்ள சிறுவர்போல், சிறுவர் நடாத்தும் ஆர்வமிக்க இயக்கம்.
* இச்சபையின் வயது என்ன?
இச்சபை செயல்படத் தொடங்கியது எப்போது?
நம்புவீர்களா இதன் வயது 129.
பாப்பரசர்ன் இச்சபை தொடங்கியது 1843-ல்.

## பூசை வழிகாட்டி

### மாசி மாதம்—1972

27. ஞாயிறு: தவக்கால 2ஆம் ஞாயிறு [ஊ]
வாசகங்கள்: ஆகி. 12: 1—4
2தீமோத். 1: 8—10
மத். 17: 1—9

28. திங்கள்: நாட்பூசை [ஊ]
வாசகங்கள்: தானி. 9: 4—10
லூக். 6: 36—38

29. செவ்வாய்: நாட்பூசை [ஊ]
வாசகங்கள்: இசை. 1: 10, 16—20
மத் 23: 1—12.

### பங்குனி

1. புதன்: நாட்பூசை [ஊ]
வாசகங்கள்: எரோமி. 18: 18—20
மத். 20: 17—28.

2. வியாழன்: நாட்பூசை [ஊ]
வாசகங்கள்: எரோமி. 17: 5—10
லூக். 16: 19—31

3. வெள்ளி: நாட்பூசை [ஊ]
வாசகங்கள்: ஆதி. 37: 3-4, 12-13, 17-28
மத். 21: 33—43, 45—46

4. சனி, நாட்பூசை [ஊ]
வாசகங்கள்: மிக். 7: 14—15, 18—20
லூக். 15: 1—3, 11—32.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கதை

# "கேட்ட வரம்"

( — ஜீ. ஏ. பிள்ளை — )

அன்று செவ்வாய்க்கிழமை. வழமைபோல சாயந்தரம் நான் அந்தோனியார் கோவிலைத் தரிசிக்கச் சென்றேன். 'செவ்வாய்க்கிழமை அந்தோனியார் பக்தி' அப்படி இப்படி என்பார்களே; அப்படி ஒன்றுமில்லை. நான் ஒரு மானசீக வழிபாட்டுக்காரன். எனது காரியாலய வேலை ஒழிந்ததும் சாயந்தரம் சில மைல்தூரம் உலாவச் செல்வது எனது வழக்கம். இரண்டு மைல்களாவது உலாவி வருவேன். "அரிசிப் பெரியோடு திருவாதிரையும்" என்பார்களே அதேபோன்றதுதான் எனது அந்தோனியார் தரிசனமும்.

உலாவப் போகும் வழியில் அமைந்திருந்தது அந்தச் சிற்றாலயம். கடற்கரையை அண்டிய மணல்வெளிப் பரப்பு கண்ணுக்கெட்டிய தூரம் பரந்திருந்தது. ஆங்காங்கே பனைமரங்களும், புளிமரங்களும் செறிந்து வளர்ந்துள்ள பாட்டைக்காடு. இந்தப் பின்னணிச் சூழலில் அமைந்திருந்ததுதான் அக்கோவில். கோவில் மிகவும் சிறிது எனினும், "மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது" என்பதுபோல, வனப் பிரதேசங்களிலும், வனாந்தரப் பிரதேசங்களிலும் கொலுவீற்றிருந்து அருள்பாலிப்பதும், பக்தர்களை ஆட்கொள்வதும் புனிதர் அந்தோனியாருக்கு உவப்பான ஒரு செயல் போலும்.

பக்தர்கள்பலர் கைகளை மேலேந்திய வண்ணம் கண்களால் நீர் தாரை தாரையாக வழிய, அந்தோனியார் அருளிரந்து நின்றனர். அந்தோனியார்தான் என்ன செய்வார்? லோகாயத செல்வங்களை மட்டுமா இந்தப் பக்தர்கள் கேட்கின்றனர். இந்த உலகமும் வேண்டும், அந்த உலகமும் வேண்டும் என்றல்லவா அடம்பிடிக்கின்றனர். இந்த உலகத்தில் 'போசனமும்' அந்த உலகத்தில் 'ஆசனமும்' வேண்டும் இந்தப் பக்தர்களுக்கு. இத்தனைக்கும் இந்த அந்தோனியார் இருக்கின்றாரே, அவர் இந்த உலகில் "ஜீவன் முக்தனாக" வாழ்ந்த ஒரு தபோதனர். இந்த பக்தர்களுள் ஒரு பக்தனாக நான் அருட்பிரகாசத்தைக் கண்டேன்.

இந்த அருட்பிரகாசத்தை எனக்குத் தெரியும். நீங்களும் கொஞ்சம் தெரிந்துகொள்வது கதையின் சுவாரசியத்துக்கு நன்று. நானும் அவர்மூலமும், அயலிலும் கேட்டுத் தெரிந்துகொண்டதைத்தான் உங்கட்குச் சொல்கிறேன். இந்த அருட்பிரகாசம் உங்களைப்போலும், என்னைப் போலும் பிறவியால் ஒரு கத்தோலிக்கர்தான். பெயரளவில் மட்டும் கத்தோலிக்கர் அல்ல. கொஞ்சம் பக்தனும் என்பதை மறுக்கமுடியாது. ஞாயிறு பூசை தவறமாட்டார். பைபிள் ஒழுங்காக வாசிப்பார்போலும். நற்செய்தி ஏடுகளிலிருந்து வாக்கியங்களை இடையிடையே அள்ளிவீசுவார்.

இன்று அருட்பிரகாசம் பக்தி பரவசநிலையில் இருந்ததில் என்னை வெகுவாக ஈர்த்துவிட்டது. வானத்தை ஏறிட்ட கண்கள். விரிந்து ஏந்திய கரங்கள். வாய் எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தது. அருட்பிரகாசத்தின் இந்தநிலை என்னுள்ளத்தில் பல ஊகங்களை எழுப்பியது. இந்த மனுஷன் ஏதோ பெரிய ஆபத்தில் சிக்கித் தவிக்கிறார்; அல்லது தாங்கமுடியாத குடும்பப் பாரமோ, பணத்தொல்லையோ ஆளை வாட்டுகிறது. அதனால் அந்தோனியாரைத் தஞ்சம் அடைந்திருக்கிறார் என என் மனம் ஒருகால் எண்ணியது. அருட்பிரகாசத்தில் ஒரு பரிவை இந்த எண்ணம் உண்டாக்கியது. அதனால் அவரது நிலையை அறிய என் மனம் தூண்டியது.

கோவிலுள் செபம் முடிந்தது. அருட்பிரகாசம் அந்தோனியார் சுரூபத்தின்முன் இரு மெழுகுவர்த்திகளைப் பற்ற வைத்தார்; சுரூபத்தைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டார். இருவரும் வெளியே வந்தோம். கோவில் படியால இறங்கும்போது அருட்பிரகாசம் ஒரு பெருமூச்செறிந்துகொண்டு, "அந்தோனியாரே! என் வேண்டுதலை எப்போதான் கைகூட வைப்பாயோ" என்றார். பின்பு என்பக்கமாகத் திரும்பிச் சொன்னார்: "கடந்த ஏழுவருடங்களாக நான் செவ்வாய்க்கிழமை விரதமிருந்து, இந்தப் பதியைத் தரிசித்து வருகிறேன். நான் அந்தோனியாரிடம் கேட்டவரம் இன்னும் கைகூடவில்லை. என் விரதம் எப்போ பலிக்குமோ?" நான் கொஞ்சம் சங்கோஷத்தோடு ...... "அது அப்படி என்ன வரம்; நான் அறியலாமா" என்றேன். அருட்பிரகாசம் சிறிது தயங்கினார். பின் ஒரு புன்முறுவலுடன் என்னை நோக்கி: "எனக்கு ஒரு சுவீப் முதலாம்பரிசு விழவேண்டும் என்று நேர்ந்திருக்கிறேன். அதுதான் அந்தோனியாரிடம் நான் கேட்கும் வரம்."

எனக்குத் தலை ஏதோ ஒரு விதமாகச் சுழன்றது. மனிதனின் அபிலாஷைகளும், பக்தி பரவசமும் எங்கேபோய் முடிகின்றன என எண்ணியவாறே நடந்தேன். அந்தோனியார் என்ன எண்ணினாரோ?

## புதியதாக 500 பொலிசார்

வடபகுதியிலே சிலகாலமாக அதிகரித்துவரும் கொலைகள், கொள்ளைகள், மற்றும் பலாத்கார சம்பவங்களைக் கட்டுப்படுத்துமாறு இங்கு மேலதிகமாக 500 பொலிசார் அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

## ஆசிரியர்கள் நியமனம்

வருகிற பங்குனிமாதம் 1-ந் திகதியிலிருந்து 1,500 ஆங்கில ஆசிரியர்களும், 300 நடன சங்கீத ஆசிரியர்களும், 200 கைப்பணி ஆசிரியர்களும் நியமனஞ் செய்யப்படவிருக்கிறார்கள். இவர்கள் கிராமப் புறங்களிலும், கஷ்டமான பிரதேசங்களிலுமுள்ள பாடசாலைகளுக்கே அனுப்பிவைக்கப்படுவார்கள்.

## பாலைதீவு அர்ச். அந்தோனியார் திருநாள்

இத்திருநாள் பங்குனி 5-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை கொண்டாடப்படும். அரசாங்க கட்டுப்பாட்டின் பிரகாரம் யாத்திரிகரை பாலைதீவுக்குக் கொண்டுசெல்லும் இயந்திரப் படகுகள் குருநகர் துறையிலிருந்து பின்னேரம் 4-30க்குப் பின் புறப்படமாட்டா.

## யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

இம்மாதம் 24-ந்திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவிருந்த யாழ்ப்பாண அசைஸ் உயர்நீதிமன்ற விசாரணை பின்போடப்பட்டுள்ளது. இதனை ஆரம்பித்து நடத்தவிருந்த நீதியரசர் சி. ஜி. வீரமந்திரி அவர்கள் வெளிநாடு செல்லவிருப்பதாலே அது பின்போடப் பட்டிருக்கிறது. வருகிற பங்குனி மாதம் 7-ம் தேதியளவில் விசாரணை ஆரம்பமாகுமெனத் தெரியவருகிறது.

## பதனிடும் தொழிற்சாலை

தாளையடியிலே பழம், மீன் ஆகியன பதனிடும் தொழிற்சாலை ஒன்றை அமைக்க வேண்டுமெனக்கேட்டு யாழ்ப்பாண அரசாங்க அதிபர்மூலம் திட்ட அமைச்சுக்கு ஒரு வேண்டுகோள விடுக்கப்பட்டிருக்கிறது. இதனை அமைப்பதால் வருடம் ஒன்றுக்கு மூன்றுலட்சம் ரூபா ஆதாயம் கிடைக்குமென்றும், இதனை அமைப்பதற்கு அங்கு போதிய முடிக்குரிய காணி இருக்கிறதென்றும் அதிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## ஆசிரியரும் விடுமுறையும்

முன்னறிவித்தல் கொடாது ஆசிரியர்கள் எவரும் விடுமுறை எடுத்துக்கொள்வது முற்றாகத் தடைசெய்யப் பட்டுள்ளது. பெருந்தொகையான ஆசிரியர்கள் எந்தவிதமான முன்னறிவித்தலுமேயின்றிக் கண்டபடியெல்லாம விடுமுறையெடுப்பதைத் தடுப்பதற்காகவே இந்த தடைஉத்தரவைக் கல்வி அமைச்சு பிறப்பித்துள்ளது. எவரேனும் விடுமுறை எடுக்கிறதாயின் ஒருநாள் முன்னதாகவே பாடசாலைத் தலைவருக்கு விண்ணப்பஞ்செய்து அவர் சம்மதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## அப்பியாசக் கொப்பிகளின் விலை

கிழக்கிலங்கைக் கடதாசி ஆலை கூட்டுத்தாபனம் அப்பியாச கொப்பிகளின் விலையை உயர்த்தியிருக்கிறது. 120 பக்கங்கொண்ட மொனிற்றர் கொப்பியின் விலையை 90 சதத்திலிருந்து 1ரூபா 25சதமாகவும், 240பக்கம்கொண்ட மொனிற்றர் கொப்பியின் விலையை 1ரூபா 30சதத்திலிருந்து 1ரூபா 75 சதமாகவும், 40 பக்கம் கொண்ட கொப்பியின் விலையை 24 சதமாகவும், 80பக்கம் கொண்ட கொப்பியின் விலையை 46சதமாகவும் உயர்த்தியிருக்கிறது.

## அறிவித்தல்

### யாழ்ப்பாண மேற்றிராசன சங்க வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாண மேற்றிராசன சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 1972-ம் ஆண்டு மாசிமாதம் 28-ந்தேதி திங்கட்கிழமை (விடுமுறை நாள்) நடைபெறும். காரிய திட்டம் பின்வருமாறு:

காலை 9-00: யாழ்ப்பாண ஆசனக்கோவிலில் மேற்றிராணியாரின் திவ்விய பூசை.

காலை 10-00: சம்பத்திரிசியார் கல்லூரிச் சாலையில் வருடாந்த பொதுக்கூட்டம்.

**பொதுக்கூட்ட நிகழ்ச்சி நிரல்:**

1. கடந்த வருடாந்த பொதுக்கூட்டக் குறிப்புகள்.
2. வருடாந்த அறிக்கை.
3. மேற்றிராணியாரின் உரை.
4. சங்க உத்தியோகஸ்தர் உட்பட, நிர்வாக சபையைத் தெரிவு செய்தல்.
5. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசியார் பற்றிய கருத்துரைகள்.
6. ஐந்து நாட்களுக்குக் குறையாத முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட வேறேதேனும் கருமங்கள்.

பொதுக் கூட்டம் முடிந்தவுடன் புதிய நிர்வாகசபை கூடும்.

அங்கத்தினர் அனைவரும் சமுகமளிக்கும்படி தயவாகக் கேட்கப்படுகின்றனர்.

எஸ். எம். ஜே. ஜுயிஸ்,
செயலாளர்.

தபால்பெட்டி இல. 2,
யாழ்ப்பாணம்

## ஆசிரியர் ஞானொடுக்கம்

காலம்: 10-3-1972 வெள்ளிக்கிழமை பிற்பகல் 5-30மணி தொடக்கம் 12-3-1972 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5-00மணி வரை.

இடம்: "ஞானொடுக்க இல்லம்" பண்டத்தரிப்பு.

போதகர்: அருட்திரு இம்மனுவேல் யேசுதாசன், மா. ம. தி. (அமலோற்பவம்).

இறைவன் அளித்த இவ்வரிய தருணத்தைப் பயன்படுத்த விரும்பும் அன்புள்ள கத்தோலிக்க ஆசிரியர்கள் நேரடியாகவோ அல்லது தங்கள் பாடசாலை முதல்வர்கள் வழியாகவோ கீழ்வரும் முகவரிக்கு 5-3-197[illegible]-க்குமுன் அறிவிக்கும்படி வேண்டுகிறோம். பாடசாலை முதல்வர்கள் தயவுகூர்ந்து எம்முடன் ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

(ஞானொடுக்க செலவுகளுக்காகச் சிறுதொகை கொடுக்கவேண்டி வரும்).

அருட்திரு ஜீ. ரி. பாலசுந்தரம், மா. ம. தி.
மறைக்கல்வி ஆலோசகர்.

மறைக்கல்வி நடுநிலயம்,
ஆயர் இல்லம் யாழ்ப்பாணம், 21-2-72.

## ஜப்பானிய பஸ்கள்

இப்பொழுது இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பஸ்களின் விலை அதிகரித்துள்ளதைத்தொடர்ந்து இலங்கைப் போக்குவரத்துச் சபை அடுத்த இருமாதங்களுக்கிடையில் ஜப்பானிடமிருந்து 500 பஸ்களை விலைக்கு வாங்கும்போல் இருக்கிறது. அந்த பஸ் வண்டிகள் கட்டுவதில் முதன்மை வகிக்கும் இசுஸு, ஹினோ ஆகிய இருகம்பெனிகளிடமிருந்தே அவைகள் வாங்கப்படும்மென அறியக்கிடக்கிறது.

## இலவச இரத்த தானம்

இலங்கையிலே இலவசமாக இரத்ததானம் பெறுகிறவர்களின் தொகை காலந்தோறும் அதிகரித்துவருகிறது. இரத்ததான தேசியசேவை 1968-ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது முதல் இதுவரை 83,354பேர் நன்கொடைப்பணம் பெறாமலே இரத்ததானம் செய்திருக்கிறார்கள். இலங்கையில் தற்போது நூற்றுக்கு அறுபது வீதமானோர் இலவசமாகவே இரத்ததானம் செய்வதாகக் கண்டறியப் பட்டிருக்கிறது.

## இரத்தினக்கல் புதையல்

மகாவலிகங்கையைத் திசைதிருப்பும் திட்டத்தின்கீழ் சுமார் அறுபது தொழிலாளர்கள் பொல்கொல்லைக்கும், மாத்தளைக்குமிடையிலே ஏறக்குறைய மூன்றுமைல் நீளமும், இருபது அடி அகலமும், முப்பது அடி ஆழமுமான கால்வாய் ஒன்றை வெட்டும்வேலையில் ஈடுபட்டிருந்தபோது விலையுயர்ந்த மாணிக்கக் கற்களையும், மற்றும் நீலக்கற்கள், வைரங்கள், புஷ்பராகம், கோமேதகம் முதலாம் பலவகை இரத்தினக்கற்களையும் கண்டெடுத்திருக்கிறார்கள். இவற்றின் பெறுமதி லட்சக்கணக்கில் இருக்குமெனச் சொல்லப்படுகிறது. அதனால் மகாவலிகங்கைத் திட்ட வேலைத்தலம் இப்போது இரத்தினச்சுரங்கம் ஆகிவிட்டது.

## புடவை வாங்கப் புதிய புள்ளி

தமிழ்-சிங்கள புதுவருடப் பிறப்பை முன்னிட்டு மக்கள் வசதியாகக் கூடியளவு புடவைகள் வாங்கத்தக்கதாய் 213-ம் இலக்கக் கூப்பன புள்ளியையும் வர்த்தக அமைச்சு அனுமதித்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவில் வைரித்த பிதா

வார்த்தையானவர் மாமிச மானார். சகல மனிதர்களும் தமது அரச குருத்துவத் திருக் கூட்டத்தில என்றும் வாழ்வு பெற, அவரே நித்திய வாழ்வாயிருக்கிறார். அவரே வாழ்வளிக்கும் வள்ளல். அவருடைய அரசும் வல்லமையும் மாட்சியும் என்றென்றுமிருப் பதால அவருடைய குருத்து வமும் என்றென்றும் இருக்கி றது. இப்பாக்கியத்தைப்பெற்ற புனிதர்களில் சிறந்த கூட்டமே கிறிஸ்துவின் அபிஷேகத்தை விசேஷ முறையில் பெற்ற குருப்பிரசாதிகள். அவர்கள் கிறிஸ்துவின் மரணத்தின் சாயலைத் தாங்கி கிறிஸ்துவின் பலியை என்றென்றும ஒப்புக் கொடுக்கிறார்கள். அழிந்து போகும் அப்பம் அவர்கள் அபிஷேகம் பண்ணப்பட்ட கைகளில என்றும் வாழ்வாக வும் வாழ்வளிக்கும் அப்பமாக வும் மாறுகிறது. அப்பம் கிறிஸ்துவாகிறது. பலிப்பொரு ளும விருந்துமாகிறது. கிறிஸ் துவின் குருக்கள் கிறிஸ்துவின விருந்தை மக்களுக்கு அளித்து அவர்களை தேவமக்களாக்கிறார் கள். அவ்விருந்தில் அமருந் எல்லோரும் கிறிஸ்துவாக மாறுகிறார்கள். இதுவே தேவன் தமது மக்களுக்குப் பரமா னந்தம் அளிக்கும நித்திய வாழ்வின் போசனம். கிறிஸ் துவின் குருத்துவத்தில் வைரித்த சிறந்த கிளையே வண. பிதா இம்மானுவேல்.

### திருச்சபை கட்டப்பட்ட பாறை

கிறிஸ்துவாகிய நித்திய குருவில்தான் அவருடைய மறை உடலாகிய திருச்சபை கட் டப்படுகிறது. இவ்வுடல் என் றும் அவரில் இருந்து சம்பூர ணத்தை அடைகிறது. நிதசய திராட்சை விருட்சமாகிய கிறிஸ்துவின் கிளைகள் அவரில் வைரிக்கின்றன. எப்படி பாறையில் சிறந்த பாறையை வைரம் என்கிறோமோ அப்ப டியே அவரின் சிறந்த குருப் பிரசாதிகள் அவரில் வைரம் அடைகிறார்கள். இப்படிப் பட்ட சம்பூரணத்தை கிறிஸ் துவில் அவர்களின் வைரம் என்கிறோம். சம்பூரணம அடையாது வைரிக்காதிருக் கும் கல்லிலேயோ கிளையிலே யோ நித்திய உயிர் உள்ள தென்று சொல்ல முடியாது. சில அளவு முறையில அதை அறுபது வருடமெனவும் காலத்தைக் கடந்த தேவன ரில் கிறிஸ்துவின் பாறை யெனவும் அழைக்கிறோம். வண. பிதா இம்மானுவேல் நித்திய இம்மானுவேலாகிய கிறிஸ்துவின் உயிர் உள்ள வைரித்த உருவம். எல்லாவற் றிற்கும் கர்த்தாவாகிய தேவன் காலத்தையும் கடந்தவராயி ருக்கும் அன்பின் அவதார மாய் வண. பிதா இம்மானு வேல் உள்ளே வந்தார். கடந் தவர் உள்ளே வந்ததால அவர் தன் படைப்பாகிய வண. பிதா இம்மானுவேல் நித்திய இம்மானுவேலானார்.

### புனிதர்களின் ஐக்கியப் பிரயோசனம்

கிறிஸ்துவின் புனிதர்களின் ஐக்கியப் பிரயோசனத்தில் விசுவசிக்கும் நாம எப்படி திராட்சைக் கிளையில் திராட் சைவிருட்சத்தை மறந்துமகிழ முடியும். வண. பிதா இம்மா னுவேல கிறிஸ்துவில் வைரித்த தினத்தைக் கொண்டாடும் போது விசேஷமாக யாழ்ப் பாணத் திருச்சபை இப்பேறு மூலம் கிறிஸ்துவில் மகிழ்கின் றது. இக்கிளையைக் கிறிஸ்து வில கட்டியெழுப்பின வந் தனைக்குரியசெமேரியா, மெலி சன், பொஞ்ஜீன், யூலன், புரூ, கியேமார்; ஆண்டை களும அவர்களுடன் உழைத்த புனித குருப்பிர சாதிகளும தேவனில் மகிழ் வதை நாம விசுவசிக்கிறோம. இமமகிழ்ச்சியை நாம் இவ்வு லகில் தானும் ஒரு சிறிதளவு ருசிக்க முடியும். நாம் எங்கள்

(பி. ஜே. அமிர்தநாயகம்)

காலத்திலிருந்து தங்கள் பரி சுத்த தனத்தால் எம்மை மகிழ்வித்த ஒரு சில குருக் களைப்பற்றிச் சிந்திக்கும் போ தெல்லாம அவர்களின ஞான இன்பமாகிய தேன் எங்கள் இருதயங்களுக்கும் ஆனந்தம் அளிக்கிறது. காலஞ்சென்ற வண. பிதாக்கள் ஞானப்பிர காசியார், நேட்டே, தோ மாஸ், பிளஷோ, சங். கிறதர் குருசோ, பனவேல் இவர் களைக் காத்திருந்த மோட்ச வீடு எவ்வளவு அலங்காரமாய் இருந்திருக்குமென நாம் ஒரு சிறிதளவு ருசிக்கலாம், இம் மகிழ்ச்சி அன்பாகிய மனித னளவு தேவன் அளிக்கும் சம் பாவனையோ தேவனளவான து. உலகத்தில் இலங்கை ஒரு சிறிய தீவு. அதில் நமதுமேற் றிராசனம் ஒன்று. இது இப் படியானால காலாகாலம் உலகம் தொடங்கி முடியும் மட்டும் எல்லாக்காலமும் எல்லா இடங்களில் கடவு ளுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட சுத்தபலியின சம்பாவனையால் நாம் அடையவிருக்கும் மகிழ்ச்சியை எப்படித்தான் வர்ணிக்க முடியும? அந்த உன்னத மகிழ்ச்சி கிறிஸ்து வின் மறைஉடலில் மண்ணு லகிலும் பிரதிபலிக்கிறது. இதேபோல மண்ணுலகில் எங்கும் எப்பொழுதும நித்திய பிதா தனது ஏகசுமாரனாகிய கிறிஸ்துவுக்கு என்றும் அளிக் கும மகிமையை அவருடைய மறை உடலாகிய பரிசுத்த திருச்சபை சம்பூரணமாய்ப் பெற்று மகிழ்ந்து கொண்டு வருகிறது. எப்படி ஞானச் சிசு பெறுவதை அதன மறை உடல் பெறாதிருக்க முடியும்? பரிசுத்த திருச்சபையில் மகி ழாதவன எப்படிக் கிறிஸ்து வில் மகிழ முடியும்? கிறிஸ்து வில் மகிழாதவன் எப்படி அவரின பிதாவில மகிழமுடி யும? நித்திய பிதாவில மகிழா தவன் அவன் பிறவாதிருந்தால் உத்தமமாயிருக்குமென்று தான் சொல்லவேண்டும்.

### யாழ் திருச்சபையின் அதிஷ்டம்

உன்னதத்தில கடவுளுக்கு மகிமையும பூவுலகில நல்ல மனதுள்ளோருக்கு சமாதான மும என்று சம்மனசுகள் பாடினார்கள் அன்று. அந்த புகழ் ஒலி யாழ் மேற் றாசனத்தில இருந்து நித்திய இம்மானுவேலாகிய தேவன் வண. பிதா இம்மானுவேல உள்ளத்தில குடிகொண்டு இருக்கும வேளையில கடவு ளுக்கு எழுப்புகிறது. அதன பயனாக யாழ் மக்கள் நல்ல மனமுள்ளவர்களாகித் தேவன் அளிக்கும நித்திய சமாதானத் துக்குப் பாத்திரவான்களாகி றார்கள். நீரானது எப்படி ஒரு நதியின் வாய்க்கால் மூலம் வரண்டதமான பூமிக்கு வேளாண்மையை அளிக்கிற தோ அதேபோல் நித்திய பரமானந்தமாகிய சீவியத்தில் நிலையான வாய்க்காலாகிய வண. பிதா இம்மானுவேல் அமலஅன்னையின் கூட்டத்தில் சேர்ந்து ஆக்காய்த்திடும் பாருக்கு கிறிஸ்துவை ஈன்ற வளின் கருணையால் நீரை இறைத்து வருகிறார். எனவே, யாழ்த்திருச்சபையின் உன் னத அதிஷ்டத்தை யார்தான் எடுத்துரைக்க முடியும்? உன் னதத்தில கடவுளுக்கு மகிமை யும் பூவுலகில் நல்மனதுள் ளோர்க்கு சமாதானம் உண் டாவதாக! கிறிஸ்துவின் குரு த்துவத்திற்குச் சதா புகழ் உண்டாவதாக. கிறிஸ்துவின குருத்துவம் அவரில் குருக் களில் சம்பூரணம் அடைவ தாக. புனித இராயப்பர் வாழ்த்தவதுபோல கிறிஸ்து வின அரச குருத்துவதிருக் கூட்டம் மென்மேலும் வளர்ச்சி பெறுவதாக.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாண மாநகரசபை 5-ம் வட்டாரத்தில் பழைய பூங்கா வீதியைச் சேர்ந்த 117/8-ம் வரிமதிப்பு இலக் கம கொண்ட வீடுகட்டக் கூடிய ஏறக்குறைய $6\frac{3}{4}$ லிப்பரப்பு விசாலங் கொண்ட, வேப்பமரம் ஒன்றும், பனைமரங்களு முள்ள காணி விற்பனைக்கு உண்டு.

ஆனைக்கோட்டை, எம். ஆர். எம். ஜெபரத்தினத் தோடு தொடர்பு கொள் ளவும்.

✠

அமரர் கிறிஸ்ரோப்பர் அவர்களின்

## 5ஆம் வருட ஞாபகம்

தோற்றம்: 17-4-1903. மறைவு: 28-2-1967

இதைக் கண்ணுறும் சகலரும் இவரின் ஆன்மசாந்திக்காக மன் றாடிக் கொள்ளுமாறு தாழ்மை யாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவரின் ஆன்ம சாந்திக் காக யாழ். அசனக்கோவிலில் 28-2-1972 திங்கட்கிழமை காலை 6-15 மணிக்கு ஒரு துக்கப்பாடற் பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

மனைவி: எலிசபெத் பூரணம் (இளைப்பாறிய ஆசிரியை)

மக்கள்

யாழ்ப்பாணம்

# யேசு தவம்....

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

செய்து உபவாசமும் இருத் தல் நன்று. நாவை அடக் கித் தேவையற்ற பேச்சுக் கள், தூஷண வார்த்தைகள் இவைகளைப் பேசாது, அடக் கமாக மரியாதையை விரும்பி வாழ்தல் வேண்டும்.

நம் எல்லோரையும் இரட் சிக்கவந்த யேசு, தமது இரட் சணிய அலுவலை ஆரம்பிக்கு முன்னர் யோர்தான் நதியில ஸ்நாபக அருளப்பரிடத்தில் மிகுந்த தாழ்மையுடனே தவத்தின் ஞானஸ்நானம் பெற்று வனத்தில் நாற்பது நாட்களாய்க் கடுந்தவம் புரிந் தார். "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" சென்ற காலம மீண்டும் வரப்போவ தில்லை. ஆதலால் இந்தத் தவக்காலத்தில் நமது ஒரே ஒரு அலுவலாகிய இரட்ச ணிய அலுவலை நினைத்து உலககவலைகளை மறந்து "தவம்" புரிந்து இரட்சணி யத்தை அடைந்து கொள்ள முயலுவோம்.

ஆசிரியர் F. S. C.

● கூரேதார்ஸ் அதாவது ஆர்ஸ்நகரின் பங்குக் குருவெ னப் பிரஸ்தபமாக அறியப் படுகிறவரான புனிதவியான்னி அருளப்பரின் சீவிய வரலாற் றை எடுத்துக்காட்டும் சினி மாப்படம் ஒன்று அந்நகரிலும் அதன் சுற்றுடலிலும் பிடிக்கப் பட்டு அங்குசெல்லும் யாத்திரி கர்களின் மனதைக் கவர்ந்து வருகிறது.

✠

யோசவ் சின்னப்பர் பெரயிரா அவர்களின்

## முதலாண்டு மரணநினைவு

3-3-72

தோற்றம்: 20-4-1914 மறைவு: 3-3-1971

"சீவியத்தில் இவரைநேசித்த வர்களே, மரணத்திலும் மறவா தீர்கள்."

இவர் எங்களைவிட்டு பரலோக பிராப்தியான முதலாம் வருடம் பங்குனி மாதம் 3-ந்தேதி வெள் ளிக்கிழமை பூர்த்தியாகிற படி யால், அன்றுகாலை 6-15 மணி யளவில் திருகோணமலை புனித மரியாள் மேற்றிராசன பேராலயத்திலும், 6-30 மணியளவில் புனித மரியநாயகி ஆலயத்தி லும் துக்கப் பூசைகள் ஒப்புக் கொடுக்கப்படும். இதைக் கண் ணுறுவோர் அவருக்காக விசேஷ விதமாக வேண்டிக் கொள்ளு மாறு தயவாய்க் கேட்டுக்கொள் கிறோம்.

"நித்திய ஒளி இவர்மேல் பிர காசிக்கக் கடவதாக."

இவரது பிரிவால் துயருறும்:

மனைவி: தெரேசா பெரயிரா

மக்கள்: ஜொஸ்பின், அலோஷி யஸ், பிலிப் அன்ரனி, வின்சன்ட், ஜெரோம், ஸ்டெல்லா, பிறிஜட்.

மருமக்கள்: எ. என். கோமஸ், மேரி எலிசபெத்.

✠

டாக்டர் சுவாம்பிள்ளை அத்தனுசியார் அவர்களின்

## 4-ம் வருட மரணஞாபகம்

29-2-72

இவரின் ஆன்மசாந்திக்காக சில்லாலை கதிரைமாதா ஆலயத் தில் 1972-ம் ஆண்டு மாசிமாதம் 29-ந்தேதி செவ்வாய்க்கிழமை காலை 6மணிக்குத் திவ்வியபூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

தயை கூர்ந்து இப்பலியில் பங் குபற்றி இவரது ஆன்ம சாந்திக் காக வேண்டிக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

இவரது ஆன்மா சாந்தியடைவதாக.

மனைவியும், மக்களும்.

சில்லாலை,
பண்டத்தரிப்பு.

✠

திரு. அந்திரியாப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை (பெரியவிளான், இளவாலை) அவர்களின்

## 1-ம் வருட மரண ஞாபகம்

27-2-1972

"சீவியத்தில் நேசித்தோம்; மரணத்தில் மறவோம்."

எங்களால் என்றும் மறக்க முடியாத விதமாய் எங்களை நேசித்த என் நேசப்பர்த்தாவும், என் அருமைத் தந்தையும், என் அன்பான மாமாவுமாகிய திரு. அ. செபஸ்தியாம்பிள்ளை அவர் கள் எங்களைப்பிரிந்து கர்த்தருள் கண்ணயர்ந்த முதலாம் வருடம் 27-2-1972உடன் பூர்த்தியாகிறது. இதைக் கண்ணுறும் அனைவரும் இவ்வாத்துமத்தை நினைவுகூர்ந்து வேண்டிக்கொள்ளுமாறு தயவா கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்:

மனைவி: எலிசபெத்.

மகன்: செசில் வில்லவராயன்.

மருமகள்: கத்தரீன் வில்லவராயன்

## நன்றித்துதி

எங்கள் கிணற்றுநீர் அசுத்த மடைந்து பாவிப்பதற்குத் தகுதி யற்றதாய் இருக்கும் வேளையில் நான் சதாசகாய மாதாவிடம் விண்ணப்பித்தேன் மாதாவின் கருணையால் உடனுக்குடன் இந் நிலையை ஏற்படுத்தியவர்கள் நிவாரணமும் செய்தார்கள். இப் போது நீரளவு திருப்தியாக இருக்கிறது. சதாசகாயமாதா வின் கீர்த்தி என்றென்றும் பரம் புவதாக.

ஒரு பக்தன்

## நன்றித்துதி

அற்புதமாக ஐர்துசாய வரம் பெற்றவரான வண. பியோசுவா மியாரிடம் நான்கேட்டுக்கொண் ட விண்ணப்பத்தினால் எனக்குச் சுகப்பிரசவம் கிடைத்தது. அவ ரின்புகழ் பரவுவதாக நேர்த்திப் படி இதனைப் பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியாள்

கரம்பொன்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ம் இலக்கத்தில் வதியும் திரு நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச் சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம் ஆண்டு மாசி மாதம் 26-ந் திகதி [illegible] அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப் பாணம் தொலைபேசி 300 தாபிதம் 1876

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org